ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 451) Sep (2) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவர்கள்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

பார்த்தசாரதி ஸ்ரீதரன்

உதவி: க்ருஷ்ணா ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..4

3. பெரியாழ்வார் திருவாய்மொழி (வ்யாக்யானம்)..22

4. பெரிய திருமொழி (வ்யாக்யானம்)..28

Website: www.namperumal.com email: sridharan_book@yahoo.co.in
Blog:namperumal.wordpress.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 269)

109. சுத்தம் தத் ஸ்ருஷ்டி மார்கேண ஸம்ச்ரயேத்தௌதிகம் வபு:
அந்த:சுத்திரியம் ப்ரோக்தா பாஹ்யசுத்திமதோ ச்ருணு
110. வக்ஷ்யமாண க்ரமை: அங்கை: மந்த்ர ந்யாஸம் ஸமாசரேத்
பஹி: சுத்தி: பவேதேவம் ததா ஸ்நாநம் ஸமாசரேத்

பொருள் – இப்படியாக உள்ள ஸ்ருஷ்டி மூலமாக, உபாஸகன் தூய்மையான உள்சரீரத்தைப் பெறுகிறான். இப்படியாக உள்சுத்தி விவரிக்கப்பட்டது. அடுத்து வெளிசுத்தி குறித்துக் கூறுவதைக் கேட்பாயாக. இப்போது கூறப்பட உள்ள வரிசை முறையைப் பின்பற்ற, முதலில் மந்த்ர ந்யாஸம் செய்யவேண்டும். இப்படியாக வெளிசுத்தி பெற்ற பின்னர், நீராடவேண்டும்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 416)

6-7-5. மேவி நைந்து நைந்து விளையாடலுறாள் என் சிறுத்
தேவி போய் இனித் தன் திருமால் திருக்கோளூரில்
பூ இயல் பொழிலும் தடமும் அவன் கோயிலும் கண்டு
ஆவி உள் குளிர எங்ஙனே உகக்கும் கொல் இன்றே

பொருள் – அவனுடைய ஸௌந்தர்யம், சீலம் போன்றவற்றைத் தனது நெஞ்சத்தால் அடைந்து, ஒவ்வொரு நொடியிலும் தளர்ந்து, தனது வயதாக ஒத்தவர்களுடன் விளையாடுவதில் பொருந்தாதவளாக, பருவம் நிரம்பாத சிறிய வயது கொண்டவளாக உள்ளபோதிலும் அவனுக்கும் மற்ற விஷயங்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை அறியும்படியான திவ்யமான இயல்பு கொண்டவளாக உள்ள எனது பெண்பிள்ளை, இங்கிருந்து புறப்பட்டுச் சென்று, தனக்கே உரியவளாகிய மஹாலக்ஷ்மி பொருந்தியவனுடைய திருக்கோளூரில், மைனாக்களை இயல்பாகவே கொண்ட பொழில்களையும், பொழில்களுக்கு அழகு சேர்க்கும் குணங்களையும், அவன் மஹாலக்ஷ்மியுடன் வாழ்கின்ற கோயிலையும் என்ணி முன்பு தளர்ந்து போனவள், இனி நேரடியாகக் காணப் பெற்று, அவளுடைய உயிர்க்கு இடமாகிய நெஞ்சம் குளிரும்படியாக இன்றி எவ்விதம் உகக்கிறாளோ?

அவதாரிகை – "திருக்கோளூரில் சோலைகளையும் அங்குள்ள பொய்கைகளையும் அவன் கோயிலையுங் கண்டால் எங்ஙனே யுகக்குமோ?" என்கிறாள்.

விளக்கம் – "திருக்கோளூரில் உள்ள சோலைகள், அங்குள்ள தடாகங்கள் மற்றும் அவன் கோயில் ஆகியவற்றைக் கண்டால் எவ்விதம் உகப்பாளோ?", என்கிறாள்.

வ்யாக்யானம் - (மேவி) பகவத்குணங்களிலே நெஞ்சை வைத்து. (நைந்து நைந்து) ஆச்ரயங்களை யழிக்கும் பதார்த்தம்போலே குணங்கள் தானழிக்குமே; "நினைதொறும் சொல்லுந்தொறும்'" இத்யாதி. இவள் மேவிற்று நிர்க்குணமாயிருப்பதொரு விஷயத்தோடன்றே; "உயர்வறவுயர் நலமுடையவனோ"டேயன்றோ. (மேவி) இங்கிருந்த நாளும் எங்களோடு பொருத்தமில்லை கிடீர். (நைந்து நைந்து) நைந்து மீளமாட்டாள்; தரித்திருக்கமாட்டாள்.

விளக்கம் – (மேவி) - பகவத் குணங்களில் தனது நெஞ்சத்தை வைத்து. (நைந்து நைந்து) - இவ்விதம் நெஞ்சத்தை வைத்தால் தளரவேண்டுமோ என்பதற்கு விடை அருளிச் செய்கிறார்; தான் அண்டி நிற்கும் பொருள்களை அழிக்கும் அக்னி போன்று, குணங்களும் அழிக்கும். குணங்கள் அழிப்பதற்கான ப்ரமாணம் திருவாய்மொழி (9-6-2) – நினைதொறும் சொல்லுந்தொறும் – என்பது போன்றவை ஆகும். ஆழ்ந்த ஈடுபாடு என்பது ஈச்வரனுடன் மட்டும் நிற்காமல், அவன் குணங்கள் முடியச் செல்லுமோ என்பதற்கு விடை அளிக்கிறார்; இவள் ஈடுபட்டு நிற்பது குணங்கள் அற்றதாக உள்ள ஒரு விஷயத்தோடு அல்ல; "உயர்வற உயர்நலம் உடையவ"னுடன் அல்லவோ? (மேவி) – அவள் இங்கிருந்த நாட்களிலும் எங்களுடன் பொருத்தம் அற்றவளாகவே இருந்தாள். (நைந்து நைந்து) - இவ்விதம் உருகி நின்ற நிலையிலிருந்து மாறவும் மாட்டாள், உயிர் தரித்திருக்கவும் மாட்டாள்.

வ்யாக்யானம் - (விளையாடலுறாள்) பருவத்துக்கு அநுரூபமான வ்யாபாரத்தை விட்டாள். விளையாடுகையைத் தவிர்ந்து மேவி நைந்தாளன்று கிடீர்; இவ்விஷயத்திலே அவகாஹித்து, புறம்புள்ளவற்றை விட்டாளத்தனை. "மாறப்பான் மனஞ்சுழிப்ப மங்கையற்தோள் கைவிட்டு" பகவத்குணங்கள் கொண்டு முழுக, புறம்புள்ளது கைவிட்டாள். நல்லதும் தீயதுமானால், தீயது போலன்றிறே நல்லது பண்ணிக் கொள்ளும்படி. "பரமாத்மநியோரக்தோ விரக்தோऽபரமாத்மநி";

“மனைப்பால் பிறந்தார் பிறந்தெய்தும் பேரின்பமெல்லாம் துறந்தார் தொழுதாரத்தோள்” என்னுமாபோலே. (மேவி நைந்து நைந்து விளையாடலுறாள்) மௌக்த்யம் மாறி விதக்தையானாளல்லள். “சப்தாதிகள் ஹேயம்” என்று சாஸ்த்ரத்தாலேயறிந்து அவற்றை விட்டு, “பகவத்விஷயம் நன்று” என்று கைவைத்தாளன்று.

விளக்கம் – (விளையாடலுறாள்)- பருவத்திற்கு ஏற்ற விளையாட்டுக்களைத் தவிர்த்தாள். விளையாட்டுக்களைத் தவிர்த்து உள்ளம் உருகி நின்றாள். எவ்விதம் இருந்தாள் என்றால், இந்த விஷயத்தில் ஆழமாக மூழ்கி, மற்ற அனைத்து விஷயங்களையும் விட்டாள். இதற்கான ப்ரமாணம் மூன்றாம் திருவந்தாதி (14) - மாற்பான் மனஞ்சுழிப்ப மங்கையற்தோள் கைவிட்டு - என்பதாகும். அதாவது பகவத் குணங்களைக் கைகொண்டு, அவற்றில் மூழ்கி, மற்றவற்றை விட்டாள். நல்லதும் தீயதும் என்று உள்ளபோது, தீயது போன்று நல்லதை எடுத்துக்கொள்ளுதல் இருப்பதில்லை அல்லவோ? இதற்கு இரண்டு ப்ரமாணம் கூறுகிறார். பார்ஹஸ்பத்ய ஸ்ம்ருதியில் – பரமாத்மநியோரக்தோ விரக்தோSபரமாத்மநி - யார் ஒருவர் பரமாத்மாவிடம் அன்புடனும், மற்ற விஷயங்களில் விரக்தியுடன் உள்ளாரோ - என்றும், இரண்டாவது திருவந்தாதி (42) – மனைப்பால் பிறந்தார் பிறந்தெய்தும் பேரின்பமெல்லாம் துறந்தார் தொழுதாரத்தோள் - என்றும் உள்ளது காண்க. (மேவி நைந்து நைந்து விளையாடலுறாள்) - இவள் தனது இளமை மாறி முதியவள் ஆனாள் அல்லள். “சப்தம் போன்ற புலன் விஷயங்கள் தாழ்ந்தவை ஆகும்” என்று சாஸ்த்ரங்கள் மூலம் அறிந்து, அவற்றைக் கைவிட்டு, “பகவத் விஷயமே நன்று” என்று அறிந்தும் ஈடுபடவில்லை.

வ்யாக்யானம் - (என் சிறுத்தேவி) தன்திருமால் என்று மேலே, பெரியதேவியைச் சொல்லுகையாலே, “சிறுத்தேவி” என்று விசேஷிக்கிறாள். (என் சிறுத்தேவி) பருவம் நிரம்பாதிருக்கச் செய்தேயும் பட்டங் கட்டின ப்ரதாந மஹிஷிகளோடொக்கச் சொல்லலாயிருக்கை. “என் பெண்பிள்ளை” என்கிற ப்ரதிபத்தியில்லை காணும் இவள் தனக்கு. “பிள்ளையைப் பிள்ளை யென்றெண்ணப் பெறுவரே” இவளுக்கு ஹிதஞ்சொன்ன நாக்கைக் கழுவவேணுமென்கிறாள். (இனி - போய்) வேறே சில கொண்டு போதுபோக்கவேண்டும் பருவத்திலே, அவற்றை விடும்படியான பாகம் பிறந்த இதுக்கு மேலே ஓர் ஏற்றஃகமுண்டாகப் போனாளோ? (இனி)

இங்கேயிருக்கச் செய்தே "நோபஜநம் ஸ்மரந்நிதம்" பிறந்ததாகில், இனி அங்குப் போய் அநுபவிப்பதுண்டோ?

விளக்கம் – (என் சிறுத்தேவி) - தன் "திருமால்" என்று பெரியபிராட்டியைக் கூறுவதால், "சிறுத்தேவி" என்று பெண்பிள்ளையைச் சிறப்பித்துக் கூறுகிறாள். (என் சிறுத்தேவி) - அல்லது தகுந்த வயது நிரம்பாமல் உள்ளபோதிலும், பட்டம் கட்டப்பட்ட முதன்மையான மஹிஷிகளுடன் சேர்த்துக் கூறலாம்படி உள்ளாள். தனது வயற்றில் பிறந்த பெண்பிள்ளையை, "பெண்" என்று கூறாமல், "தேவி" என்று ஏன் கூறவேண்டும் என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்; "என் பெண்பிள்ளை" என்ற நிலையே இவளுக்கு இல்லை. இவ்விதம் வேறு யாரேனும் இருந்தனரோ என்பதற்கு ப்ரமாணம் பெரியதிருமொழி (8-2-9) - பிள்ளையைப் பிள்ளை யென்றெண்ணப் பெறுவரே – என்பதாகும். இந்தப் பெண்பிள்ளைக்கு நல்வாக்குகள் கூறிய நாக்கைக் கழுவவேண்டும் என்று உள்ளாள். (இனி - போய்) - வேறு சில பொருள்களைக் கொண்டு தனது பொழுதைக் கழிக்க வேண்டும்படியான இந்த வயதில், அவற்றை விடும்படியாக பாசம் பிறந்த இதற்கு மேலும் ஒரு அதிசயம் உள்ளதாக எண்ணிச் சென்றாளோ? (தன் திருமால் திருக்கோளூரில்) - இங்கு உள்ளபோதே, சாந்தோக்யத்தில் (8-12-3) – நோபகநம் ஸ்மரந்நிதம் – முக்தன் இந்தச் சரீரத்தை எண்ணுவதில்லை - என்பதாக, ஸம்ஸாரத்திலிருந்து கிளம்பிய முக்தனுக்கு அங்கு சென்ற பின்னர் கிட்டவல்ல ஞானம் இவளுக்கு இங்கேயே பிறந்தது என்றால், அங்கு சென்று அனுபவிப்பதற்கு ஏதும் உள்ளதா?

வ்யாக்யானம் - (தன் திருமால் திருக்கோளூரில்) அவள்பக்கல் இருக்குமாபோலேயாகாதே இவள்பக்கலும் அவன் இருக்கும்படி. லோகத்தில் சேஷசேஷிபாவம் போலன்றிறே ப்ரணயினிபக்கல் பரிமாற்றம். "பதிம் விச்வஸ்ய" என்கிறபடியே ப்ரமாணத்தைப் பார்த்துப் பரிமாறவொண்ணாதிறே; அபிமத விஷயத்தில். தனக்கு ஸர்வஸ்வமான ஸ்ரீரிய:பதி கண்வளர்ந்தருளுகிற வூரிலே.

விளக்கம் - (தன் திருமால் திருக்கோளூரில்) - "திருமால்" என்ற சொல்லிற்கு, மஹாலக்ஷ்மியைப் போன்றே அவன் இவளிடமும் மயக்கத்தில் உள்ளான் என்பதைக் கூற எண்ணியவராக, "பெரியபிராட்டியாரிடம் இருப்பது போன்று அல்லவோ அவன் இவளிடமும் இருக்கிறான்", என்கிறார். இந்த லோகத்தில் உள்ளவர்களிடம் காண்பிக்கின்ற "எஜமானன் – அடிமை" என்ற நிலையானது,

காதலியிடம் இருப்பதில்லை அல்லவோ? ஆகவே, "பதிம் விச்வஸ்ய - உலகின் நாயகன்" என்பதற்கு ஏற்ப, அந்த ஒரு ப்ரமாணத்திற்கு ஏற்ப, காதலியுடன் கலந்து பழக இயலாது அல்லவோ? தனக்கு அனைத்து செல்வமுமாக உள்ள திருமால், திருக்கண்கள் வளர்ந்தருளும் ஊரில்.

வ்யாக்யானம் - (பூவியல் பொழிலும்) தழையும் தண்டும் கொம்பும் கொடியுமாய்த் துராலாயிராதே, வெறும் பூவேயாயிருக்கை. நித்யவஸந்தமான சோலை. (தடமும்) அப்பொழிலை வளர்ப்பதாய்ப் பரப்பு மாறப் பூத்த தடாகமும். (அவன் கோயிலுங் கண்டு) "மாமணிக்கோயிலே வணங்கி" என்கிறபடியே, அவனிலும் அவன் விரும்பி வர்த்திக்கிற கோயிலையும் கண்களாரக் கண்டு. திவ்யாத்ம ஸ்வரூபத்துக்கு ப்ரகாசகமான திவ்யமங்கள விக்ரஹம்போலே, அவையிரண்டுக்கும் ப்ரகாசகமான கோயில். கோயிலைக் கண்டபோதே உள்ளுண்டான வஸ்துவையும் அறுதியிடலாயிருக்கை. உள்ளில் பொன்னுக்குத் தக்க செப்பாயிருக்குமிறே. (கண்டு) இங்கேயிருந்து மாநஸாநுபவ மாத்ரமாய் க்லேசப்பட்டவள் கண்ணாரக் கண்டு. "பிள்ளை திருநறையூரரையரும் பட்டருமாக உள்ளே ப்ரதக்ஷிணம் பண்ணாநிற்க, இட்ட அடி மாறியிடமாட்டாதே கண்களாலே பருகுவாரைப்போலே பார்த்து வாழ்ந்து கொண்டு போகிறபடியைப் பின்னே நின்று கண்டநுபவித்தேன்" என்று நஞ்சீயர் அருளிச்செய்வர். ஆச்சானும் ஆண்டானுமாகக் கிழக்கே நடக்கிறபோது, திருப்பேருக்குக் கிழக்குப் போகவும் மாட்டதே, ஏறித் திருவடி தொழவும் மாட்டாதே திருப்பேர்நகரான்கோயிலைப் பார்த்துக் கொண்டு இருந்தார்களாம்.

விளக்கம் – (பூவியல் பொழிலும்) - தழைகள், தண்டுகள், கொடியும், கொப்புமாக வெறுமனே இராமல், வெறும் மலர்களாகவே இருத்தல். "பூ இயல் பொழில்" என்பது முக்கால வினைத்தொகை என்பதால், "நித்ய வஸந்தமான சோலை" என்றார். (தடமும்) -அந்தப் பொழிலை மேலும் வளர்ப்பதாக, பரப்பு மாறாமல் உள்ள பூத்த தடாகமும். (அவன் கோயிலுங் கண்டு) - "கோயில்" என்று மட்டும் கூறாமல், "அவன் கோயில்" என்று சிறப்பித்ததற்குக் காரணம் அருளிச்செய்கிறார்; பெரியதிருமொழி (1-1-6) – மாமணிக்கோயிலே வணங்கி - என்பதற்கு ஏற்ப, அவனைக்காட்டிலும், அவன் விரும்பி வாழ்கின்ற கோயிலையும் கண்ணாரக் கண்டு. திவ்யாத்ம ஸ்வரூபத்திற்கு ப்ரகாசமாக உள்ள திவ்யமங்கள விக்ரஹம் போன்று, அவை இரண்டிற்கும் ப்ரகாசமான கோயில். கோயிலைக் கண்டவுடன், அதன் உள்ளே இருக்கின்ற வஸ்துக்களையும் உறுதிபடக் கூறலாம்படி இருத்தல். உள்ளே இருக்கின்ற பொன்னுக்கு ஏற்ப செப்பு இடுவார்கள் அல்லவோ? (கண்டு) -

இங்கே இருந்தபடி தனது மனதால் மட்டுமே காண்பதால் துன்பம் அடைந்தபடி இருந்தாள், இப்போது நேரடியாகக் கண்டு. அவனுடைய திருக்கோயிலை நேரடியாகக் காண்பதால் உண்டாகும் பலன் என்ன என்பதற்கு இரண்டு நிகழ்வுகளைக் கூறுகிறார். "திருவரங்கம் கோயிலில் ப்ரதக்ஷிணம் செய்யும்போது, மற்றவர்கள் அனைவரும், கண்களை மூடியபடி ஓடும் குதிரை போன்று வேகமாகச் செய்வார்கள்; ஆனால் பிள்ளை திருநறையூர் அரையரும் பராசரபட்டருமாக ப்ரதக்ஷிணம் செய்யும்போது, அங்குள்ள மண்டபங்கள் போன்றவற்றையும் கண்களால் பருகுவதைப் பார்த்து, வாழ்ந்தபடி செல்லும் விதத்தை நான் பின்னே சென்று கண்டு அனுபவித்தேன்", என்று நஞ்சீயர் கூறுவார். ஆச்சானும் ஆண்டானும் திருவரங்கத்திற்குக் கிழக்கே உள்ள திருக்குடந்தைக்குச் சென்று கொண்டிருந்தனர். அப்போது வழியில் திருப்பேர்நகர், அதாவது அப்பக்குடத்தான் என்ற கோயிலடி, திருக்கோயிலைக் கண்டார்கள். அந்தத் திருக்கோயிலைக் கடந்து போக இயலாமல், கோயிலுக்குச் சென்று ஸர்வேச்வரனைத் தொழாமல், கோயிலின் அழகை ஈடுபாட்டுடன் பார்த்தபடி நின்றனர்.

வ்யாக்யானம் - (ஆவியுள் குளிர) இவ்விடத்தைப் பட்டர் அருளிச் செய்யாநிற்கச் செய்தே மேலெழ அருளிச்செய்தாராய், சீராமப்பிள்ளையிருந்தவர் "சீயா! எம்பார் அருளிச் செய்யும்போது 'ஆவியுள் குளிர' என்று முகந்து கொண்டருளிச் செய்யும்படி கேட்டறிகை யில்லையோ?" என்றருளிச் செய்தார். கமர் பிளந்த பரப்படங்கலும் மறுநனையும்படியா யிருக்கை. (எங்ஙனேயுகக்குங்கொல்) இவள் பருவம் நிரம்பாதிருக்கச் செய்தே, புறம்புள்ளவற்றை விட்டு அவனை அநுஸந்தித்து சிதிலையாகிறபோது அவ்வழகு கண்டு அநுபவிக்கப் பெற்றேன்; அவனைக் கண்டநுபவிக்கிறபோதை அழகு நான் கண்டு வாழப் பெற்றிலேன் என்கிறாள். (இன்றே) எனக்கு சோகத்தாலே சூந்யமாய்க் கிடக்கிற இன்று, அவளுக்கநுபவத்தாலே அடிக்கழஞ்சு பெற்றுச் செல்லுகிறதே! ஒரு நாளிலே இப்படியாவதே! நாள் வாசியற்றிருந்ததிறே விஷயாதீநமாய் வருகையாலே.

விளக்கம் – (ஆவியுள் குளிர) - இந்த இடத்தைப் பராசரபட்டர் விளக்கும்போது "நெஞ்சம் குளிரும்படியாக" என்று மேலாக விளக்கினார்; இதனைக் கண்ட சீராமப்பிள்ளை, "ஸ்வாமி! இந்த இடத்தை எம்பார் அருளிச்செய்யும்போது, மண்டி அனுபவித்தபடி அருளிச்செய்வார் என்பதை நீவிர் கேட்டறிந்தது இல்லையோ?", என்றார். அதாவது வரண்டு கிடந்த நிலத்தில் மழை பெய்தால் எவ்விதம் முழு

இடத்திலும் குளிர்ச்சி பரவுமோ அது போன்று கோயிலைக் கண்டால் உள்ளது. (எங்ஙனே உகக்குங்கொல்) - இவள் தகுதியானது நிரம்புவதற்கு முன்பாகவே மற்ற விஷயங்களைக் கைவிட்டு, அவனை மட்டுமே எப்போதும் எண்ணியபடி, உள்ளம் குளிர்ந்து நிற்கும் அழகை நான் கண்டு அனுபவிக்கப் பெற்றேன். ஆனால் அவனைக் கண்ட இவள், அவனை அனுபவிக்கும்போது உள்ள அழகை நான் கண்டு அனுபவிக்கப் பெறவில்லை. (இன்றே) - எனக்குச் சோகம் காரணமாக அனைத்தும் சூந்யமாக உள்ள இன்று, அவளுக்கு அனுபவத்தால் அனைத்தும் பரிபூர்ணமாக உள்ளது. ஒரு நாளில் இவ்விதம் ஆகிறதே! நாளின் தன்மையானது இவ்விதம் வேறுபட்டு உள்ளதன் காரணம், தனக்கு ப்ரியமான பெண்ணைப் பிரிந்ததாலும், அவளுக்கு விருப்பமான நாயகனை அவள் அடைந்ததாலும் ஆகும்.

6-7-6. இன்று எனக்கு உதவாது அகன்ற இளமான் இனிப் போய்
தென் திசைத் திலதம் அனைய திருக்கோளூர்க்கே
சென்று தன் திருமால் திருக்கண்ணும் செவ்வாயும் கண்டு
நின்று நின்று நையும் நெடும் கண்கள் பனி மல்கவே

பொருள் – அவளைப் பிரிந்து நோவுபடும் எனக்கு, இன்றைய தினத்தில் உதவாமல் என்னை விட்டு அகன்று எனது சிறுப்பெண்பிள்ளையான அவள், வருத்தத்துடன் வழி முழுவதும் நடந்து சென்று, தெற்குத் திசைக்கு அலங்காரம் போன்றுள்ள திருக்கோளூர் புகுந்து, அவ்விதம் புகுந்த பின்னர், தனக்கு விருப்பமான சேர்க்கையை தனக்குத் தானே வெளிப்படுத்தி, தன்னை விரும்புவர்களை விட்டு அகன்றபடி உள்ள ஸ்ரீமானாகிய ஸர்வேச்வரனுடைய திருக்கண்களையும், சிவந்த திருவாயையும் கண்டு, தனது நீண்ட கண்கள் ஆனந்தக்கண்ணீரால் நிறைந்திருக்கும்படி பெருமகிழ்ச்சியால் ஒவ்வொரு நொடியும் தளர்கிறாள்.

அவதாரிகை - அவனுடைய ஸ்நேஹ பஹுமாந வீக்ஷிதாதிகளைக் கண்டு ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே சிதிலையாகக் கடவளாகாதே யென்கிறாள். இவள்தான் உகப்பது அங்கே புக்குத் தரித்து நிற்கவல்லளானாலிறே. "எங்ஙனேயுகக்குங்கொல்" என்றாள் கீழிற் பாட்டில்; இங்ஙனே யுகக்குமென்கிறாள் இப்பாட்டில்; மகள் காணப் புகுகிற விஷயத்தை யநுஸந்திப்பது, தன் மகள் படியை யநுஸந்திப்பதாய்த் திருத்தாயார் படுகிறபாடு என்தான்!

விளக்கம் - கடந்த பாசுரத்தில் உள்ள “எங்ஙனே உகக்குங்கொல்” என்பதுடன் சேரும் விதமாக இரண்டு வகையான அவதாரிகைகளை அருளிச்செய்கிறார். அவனுடைய சிநேஹத்தின் மிகுதியைக் காண்பிக்கும் அவனது திருக்கண்கள் போன்றவற்றைக் கண்டு, உவகையின் மிகுதியால் உருக்குலைந்து நிற்பாள் அன்றோ என்கிறாள்; இது முதல் அவதாரிகை ஆகும்; இவள் எவ்விதம் உகக்குக்கூடும் என்றால், அங்கு சென்று ஊர் பிழைத்தால் அல்லவோ என்கிறாள். அடுத்து, இரண்டாவது அவதாரிகை கூறப்படுகிறது; “எங்ஙனே உகக்கும் கொல்” என்று கடந்து பாசுரத்தில் கேட்கப்பட்ட வினாவிற்கு, “இப்படியாக உகப்பாள்” என்கிறாள்; தனது பெண்பிள்ளை காண்பதற்குத் துடித்தபடி உள்ள விஷயத்தை எண்ணுதல், தனது பெண்பிள்ளையின் தன்மையை எண்ணுதல் என்பதாகத் திருத்தாயார் அடையும்பாடுகள் எத்தனை!

வ்யாக்யானம் - (இன்று எனக்கு உதவாதகன்ற) பிள்ளை பெற்று வளர்க்கிறது ஆபத்துக்கு உதவுகைக்கன்றோ? தன்னைப் பிரிந்த இத்தனிமைக்கும் இத்தசைக்கும் மேற்பட எனக்கோர் ஆபத்துண்டோ? இன்றெனக்கு உதவாதொழிவதே! “அதோநு கிம் து:கதரம் ஸோஹமிக்ஷ்வாகு நந்தநம், இமாமவஸ்த்தாமாபந்நோநேக பச்யாமி ராகவம்” நான் நெடுங்காலங்கூடி வருந்தித் தம்மைப் பெற்றது, தம்மைப் பிரிந்து நான் இவ்வவஸ்த்தையைப் ப்ராபித்த இற்றைக்கன்றோ? இன்று தம்மை நான் காணாதொழிவதே என்றானிறே!

விளக்கம் – (இன்று எனக்கு உதவாதகன்ற) - ஒரு பிள்ளையைப் பெற்று வளர்த்தல் என்பது, ஆபத்து காலத்தில் உதவி செய்வதற்காக அல்லவோ? இவளுக்கு வந்த ஆபத்து என்ன? அவனை விட்டுப் பிரிந்து நிற்கும் இந்தத் தனிமைக்கும், இந்த நிலைக்கும் மேற்பட எனக்கு வேறு ஏதேனும் ஆபத்து உள்ளதோ? இன்று எனக்கு உதவாமல் சென்றாள். ஆனால், இவ்விதம் கூறுவது சரியா என்றால், கலக்கம் என்பது இப்படியாகக் கூறும்படிச் செய்யும் என்கிறார்; அயோத்யாகாண்டம் (59-26) - அதோநு கிம் து:கதரம் ஸோஹமிக்ஷ்வாகு நந்தநம், இமாமவஸ்த்தாமாபந்நோநேக பச்யாமி ராகவம் - இப்படிப்பட்ட நிலையில் உள்ள நான், இக்ஷ்வாகு குலத்தில் அவதரித்த இராமனைக் காண இயலவில்லை; இதனைக் காட்டிலும் துக்கம் தரக் கூடிய விஷயம் என்ன உள்ளது - என்று தசரதன்

கூறுகிறான்; "நான் நீண்டகாலம் தவம் இயற்றி அவனைப் பெற்றேன், இன்று நான் அவனைப் பிரிந்து இந்த நிலையில் உள்ளேன்", என்றாள் அல்லவோ?

வ்யாக்யானம் - (எனக்குதவாது) சக்ரவர்த்தியில் தனக்குண்டானவாசி, "நின்று தூங்குகின்றேன்" என்னுமாபோலே;

விளக்கம் – (எனக்குதவாது) - தசரத சக்ரவர்த்திக்கும், இந்தத் திருத்தாயாருக்கும் உள்ள வேறுபாடு என்ன? அவன் இராமனைப் பிரிந்தவுடன் முடிந்தான்; இவள் முடியவும் இயலாமல், உயிர் தரிக்கவும் இயலாமல் உள்ளாள். இதற்கு ஓர் உதாரணம் காண்பிக்கிறார்; நாச்சியார் திருமொழி (9-9) – நின்று தூங்குகின்றேன் - என்பது காண்க. அதாவது, கொன்றை மாலை என்பதால் அழகருக்குச் சூட்டுவதற்கு ஆகாது; அந்தக் கொன்றை மலரானது திருமாலிருஞ்சோலையில் உள்ளதால், சைவர்களாலும் பறிக்க இயலாது; ஆக இருவருக்கும் அந்த மலரானது சேராமல் கிடந்து வாடுகிறது; இதனைப் போன்றே நானும் அவளுடைய ஸம்பந்தம் காரணமாக, எனது உறவினர்களுக்கு ஆகாதவளாக, அவளாலும் ஏற்கப்படாமல், அவளுடன் சேரவும் இயலாமல், முடியவும் முடியாமல் தடுமாறியபடி உள்ளேன் என்கிறாள்.

வ்யாக்யானம் - அல்லாத தாய்மாரைப் போலேயோ நான் தனக்கிருப்பது? தன் உகப்பே எனக்கு உகப்பாக இருக்குமவளன்றோ நான். இவளுடைய அபிமத விஷயத்துக்கு கடகையும் தானேயிறே. "பிரானிருந்தமை காட்டினீர்" என்று, "அன்னையும் அத்தனுமென்று அடியோமுக்கு இறங்கிற்றிலள்" பிள்ளைகாள்! பொகட நினைப்பார் பழியிட்டுப் போகவேணுமோ? அடியாரை நியாமகரென்ன வேணுமோ? வழிக்குத் துணையாவாரை நிவாரகர் என்று பொகடுவதே!

விளக்கம் – "எனக்கு" என்பதன் மூலம், திருத்தாயாரை தசரதனிடமிருந்து வேறுபடுத்தினார்; அடுத்து மற்ற தாயார்களிடமிருந்து வேறுபடுத்துகிறார். நான் மற்ற தாயார்கள் போன்று இவளிடம் உள்ளேனா? அவர்களைக் காட்டிலும் இந்தத் தாயாருக்கு உள்ள சிறப்பு என்னவென்றால், "எனது பெண்பிள்ளையின் உகப்பே எனது உகப்பு என்று உள்ளவள் அல்லவோ நான்?", என்று எண்ணுபவள் ஆவாள். இதற்கான காரணம் என்னவென்றால், இவளுடைய காதலனுடன் சேர்ப்பவள்

தாயாகிய தானே அல்லவோ? இதற்கு ப்ரமாணம் திருவாய்மொழி (6-5-5) - பிரானிருந்தமை காட்டினீர் - என்பதாகும். இவ்விதம் இவளைத் தனது நாயகனுடன் சேர்ப்பவள் இந்தத் திருத்தாயாரே ஆவாள் என்றுள்ளபோதிலும், இவளுக்கு உதவாமல் அந்தப் பெண்பிள்ளை சென்றது ஏன்? "தாயும் தந்தையும் நம்முடைய விருப்பத்திற்குத் தடை ஏற்படுத்துவர்கள் அல்லவோ என்று சந்தேகம் அடைந்து சென்றாள்", என்று விடை அளிப்பதற்கு ஒரு நிகழ்வைக் கூறுகிறார்; பெரியதிருமொழி (3-7-7) - அன்னையும் அத்தனுமென்று அடியோமுக்கு இறங்கிற்றிலள் – என்பது காண்க; பிள்ளைகாள்! எங்களை விட்டுச் செல்ல எண்ணிய பின்னர், எங்களுக்குப் பழி ஏற்படுத்திச் செல்லவேண்டுமோ? அடியார்களை, "நியமிப்பவர்கள்" என்று எண்ணலாமோ? வழிக்குத் துணையாக வரக் கூடியவர்களை "நியமிப்பவர்கள்" என்று எண்ணி விடுவது சரியா? அடியார்களாகிய எங்களுக்குத் தாய் மற்றும் தந்தை என்ற உறவுமுறையைக் காண்பித்து, அதன் விளைவாக இரங்காமல் சென்றாள்.

வ்யாக்யானம் - (அகன்ற) இப்படி கைகழியப் போவதே! ஒரு தேசத்தே நின்றுதான் உதவாதொழியப் பெற்றேனோ? (இளமான்) "பொகட்டது தாயையிறே" என்றறிந்து மீளமாட்டாத பருவங்கிடீர்! இவளை நான் வெறுக்கிறதென்? பருவம் அதுவானால் செய்யலாவது உண்டோ?

விளக்கம் – (அகன்ற) - இவ்விதம் நம்மை விட்டுச் செல்கிறாளே! அதாவது நாம் உள்ள இடத்தில் இராமல், தொலைவில் உள்ள இடத்திற்குச் செல்கிறாளே! ஆனால் தொலைவில் உள்ள இடத்திற்குச் சென்றால் ஏன் வருந்தவேண்டும்? இருக்கும் இடத்திலேயே இருந்தபடி, ஆனால் உதவாமல் இருந்தால் சிறந்ததோ என்பதற்கு விடை அளிக்கிறாள்; அது நல்லதே; காரணம், அதே ஊரில் இருந்தால் மீண்டும் திரும்புவாள் என்றிருக்கலாம்; ஆனால் நீண்ட தொலைவு அல்லவோ சென்றாள்? (இளமான்) - தான் விட்டுச் சென்றது தாயை அல்லவோ என்று அறிந்து மீளமாட்டாத வயதைக் கொண்டவள் ஆவாள். இவளை நான் ஏன் வெறுக்கவேண்டும்? இவளுக்குப் பருவம் இதுவாக உள்ளபோது, நாம் செய்யக்கூடியது வேறு ஏதேனும் உள்ளதோ?

வ்யாக்யானம் - (இனிப் போய்) உறவுமுறையாரில் தாய்க்கு மேற்பட்டார் இல்லையிறே! இப்படி தாயுங்கூடப் புறம்பாம்படி அவன் பக்கலிலே பிறந்த பாவபந்தத்துக்குமேலே “அவ்வருகே யொன்றுண்டு” என்று போனாளோ? வந்தேறியைக் கைவிட்டால், ஸ்வதஸ்ஸித்தமானதுக்குச் செய்யவேண்டுவதொன்றுண்டோ? (தென்திசை இத்யாதி) “தெற்குத் திக்கு” என்று கொண்டு, ஆர்யர்களிகழ்ந்த ம்லேச்ச பூமியிறே; இங்ஙனேயிருக்கச் செய்தே, ஓர் ஆபரணந்தானே எல்லா ஆபரணங்களுக்கும் நிறங்கொடுக்க வற்றாமாபோலே, திருக்கோளூருண்டாகையாலே திக்காக ச்லாக்யமானபடி. “தக்ஷிணாதிக் க்ருதாயேந சரண்யா புண்யகர்மணா” என்னுமாபோலே.

விளக்கம் - (இனிப் போய்) - உறவுமுறைகளில் தாய்க்கு மேலானவர்கள் யாரும் இல்லை அல்லவோ? இவ்விதம் தாயையும் கூடத் தள்ளும்படிச் செய்து, அவன் மீது ஏற்பட்டுள்ள பாவபந்தத்திற்கு மேலே, “அத்தகைய இடத்தில் ஏதோ ஒன்று உள்ளது” என்று எண்ணிச் சென்றாளோ? பாவபந்தம் இருந்தாலும், சொந்த அனுபவம் மற்றும் கைங்கர்யம் ஆகியவற்றைச் சிந்தித்து இவ்விதம் சென்றிருக்கலாம் அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார். ஒரு காரணம் மூலமாக ஏற்பட்ட தாய்தந்தையர்களை கைவிட்டு, எப்போதுமே தயாராக உள்ள வஸ்துவிற்குச் செய்யவேண்டுமோ? (தென்திசை இத்யாதி) - இதனை “தெற்குத் திக்கு” என்று கொண்டு, ஆரியர்கள் இகழ்ந்த மிலேச்ச பூமி அல்லவோ? இவ்விதம் உள்ளபோது, ஒரு ஆபரணம் மற்ற ஆபரணங்களுக்கு ஒளியைக் கொடுப்பது போன்று, திருக்கோளூர் அந்தத் திசையில் உள்ளதால் அது கொண்டாடத்தக்கதாக உள்ளது. இதற்கு உதாரணம் கூறுகிறார்; ஆரண்யகாண்டம் (11-82) - தக்ஷிணாதிக் க்ருதாயேந சரண்யா புண்யகர்மணா - அகத்தியரின் செயலால் தெற்குத் திசையானது அனைவருக்கும் புகலிடமாகச் செய்யப்பட்டது – என்பது காண்க.

வ்யாக்யானம் - (திருக்கோளூர்க்கே சென்று) - திருத்தாயார்க்கு அரிதாய்த் தோற்றுகிறபடி. அவளுக்கு வழிப்போக்கோடு, ஊரில் புகுதியோடு, அவன் தன்னைக் காணுமத்தோடு வாசியற எல்லாம் உத்தேச்யமாயிருக்குமிறே. அர்ச்சிராதி கதியோடு, பரமபதத்தோடு, அங்குப்புக்கால் ஸதா தர்சநம் பண்ணுமவனோடு வாசியற ப்ராப்யாந்தர்க்கதமாகக் கடவதிறே.

விளக்கம் – (திருக்கோளூர்க்கே சென்று) - அங்கு செல்வது திருத்தாயாருக்கு அரியதாகத் தோன்றியது. ஆனால், திருத்தாயாருக்கு அரிதாகத் தோன்றும்போது, அந்த பெண்ணிற்கு அரிதாக இருக்காதோ என்பதற்கு விடை அளிக்கிறார். அவளுக்குப் போகும் வழி போன்றவை இலக்காக இருக்குமோ என்பதற்கு விடை அளிக்கிறார்; அர்ச்சிராதி கதி, பரமபதம், அங்கு சென்ற பின்னர் அவனை எப்போது தரிசித்தபடி இருத்தல் போன்றவை அனைத்தும் எந்தவிதமான வேறுபாடும் இன்றி, அடையப்படும் இலக்கிற்குள் அடங்கி விடுவது போன்று, இவளுக்கு உள்ளது.

வ்யாக்யானம் - (தன் திருமால்) "ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதாமாதா ச மாதவ:" இங்கு விட்ட உறவெல்லாம் அங்கே உண்டாயிருக்கிறபடி. அவனுடைய ப்ராப்ய வேஷந்தான் லக்ஷ்மீபதியாயாகாதேயிருப்பது. விசிஷ்ட வேஷத்திலல்லது ப்ரதிபத்தி பண்ணவறியாள்.

விளக்கம் – (தன் திருமால்) - "திருமால்" என்று பெரியபிராட்டியாரையும் சேர்த்துக் கூறியது ஏன்? மஹாபாரதம் - ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதாமாதா ச மாதவ: - அனைத்து லோகங்களுக்கும் திருமால் தாயும் தந்தையுமாக உள்ளான் - என்பதற்கு ஏற்ப, இங்கு அந்தப் பெண்பிள்ளை விட்டுச் சென்ற உறவுகள் அனைத்தும், அவளுக்கு அங்கு உண்டாகும்படி உள்ளது. அவனுடைய "அடையப்படும் இலக்காக உள்ள நிலை" என்பது, "மஹாலக்ஷ்மியின் நாயகன்" என்று அல்லவோ உள்ளது? அவனே அடையத்தக்க இலக்கு என்றால் போதாதோ, "லக்ஷ்மிபதியாய்" என்று ஏன் கூறவேண்டும் என்பதற்கு விடை அருளிச்செய்கிறார். இருவருமாகச் சேர்ந்துள்ள நிலையில் அல்லாமல், மற்ற நிலையைக் குறித்து இவள் தனது எண்ணத்தைச் செலுத்துவதற்கு அறியாதவள் ஆவாள்.

வ்யாக்யானம் - (திருக்கண்ணும் செவ்வாயுங்கண்டு) "இவள் முற்படும்படி நாம் பிற்பாடராவதே!" என்று பொறை கொள்ளுகைக்குக் குளிர நோக்குகிற நோக்கும், சில சொல்லப்புக்குத் தடுமாறுகிற திருப்பவளமும் இருக்கிறபடி. அவனுடைய "கோவை வாய் துடிப்ப மழைக்கண்"கள் இருக்கிறபடி. (நின்று நின்று நையும்) நாட்செல்ல நாட்செல்ல இற்றிற்று விழும். கண்டால் முன்புத்தைப் பிரிவை நினைக்க அறியாள்: எதிர்த்தலை படுகிறது கண்டு ஈடுபடுகிறபடி. "காணுங்காற் காணேன் தவறாய காணாக்கால், காணேன் தவறல்லவை" என்றிறே இருப்பது.

அதாவது நாயகனான வுன்னைக் காணும்போது தப்பானது கண்டறியேன், காணாதபோது தப்பல்லாதது கண்டறியேன்.

விளக்கம் – (திருக்கண்ணும் செவ்வாயுங்கண்டு) - ஆனால் அவனுடைய திருக்கண்களையும் சிவந்த வாயும் கண்டால், உருக்குலைய வேண்டுமோ என்பதற்கு விடை அளிக்கிறார். "நாம் இவளைக் காண்பதற்கு முன்பாகவே இவள் நம்மைக் காண்பதாக, நாம் காலதாமதம் செய்தபடி உள்ளோமே" என்று பொறை கொள்வதற்கு ஏற்ப குளிர நோக்கும் திருக்கண்களும், இப்படிப்பட்ட சில சொற்களைக் கூறத் துடித்தபடி உள்ள சிவந்த வாயும் உள்ள நிலை. இதன் மூலம் இவளிடம் அவனுக்கு ஏற்பட்ட மயக்கத்தின் மிகுதி வெளிப்படுகிறது என்கிறார். அதாவது, கோவைப்பழம் போன்ற வாய் துடித்தபடி உள்ளது. கருணை மழை பொழிகின்ற திருக்கண்கள் நோக்கின. (நின்று நின்று நையும்) - நாட்கள் செல்லச்செல்ல இற்று இற்று தளர்ந்தபடி இருப்பாள். தன்னை விட்டு அகன்று சென்றவனை மீண்டும் கண்டால் வெறுப்பு உண்டாகும் அல்லாமல், ஈடுபாடு உண்டாகுமோ என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்; அவனைக் கண்டவுடன் முன்பு ஏற்பட்ட பிரிவைக் குறித்து நினைப்பதற்கு அறியமாட்டாள். தன்னைப் பிரிந்து அவன் அடையும் நிலையைக் காண்பதில் ஈடுபாடு கொள்கிறாள். திருக்குறள் (1286) - காணுங்காற் காணேன் தவறாய காணாக்கால், காணேன் தவறல்லவை - என்பது போன்று அல்லவோ உள்ளாள்? இதன் பொருள், "காதலரைக் காணும்போது அவருடைய தவறுகளை நான் காண்பதில்லை. அவரைக் காணாதபோது, அவரின் தவறுகளல்லாத நன்மையான காரியங்களை மட்டுமே காண்பேன்", என்பதாகும்.

வ்யாக்யானம் - (நெடுங்கண்கள் பனிமல்கவே) இக்கண்ணில் பரப்படங்கலும் பரப்பு மாறும்படி ஜலதத்த்வம் உண்டாவதே! (நின்று நின்று நையும்) மாறாதே சிலையாகா நின்றாள். கிண்ணகத்தில் இளகின கரைபோலே உடைகுலைப்படுகிறபடி. (நெடுங்கண்கள் பனிமல்கவே) நெஞ்சுக்கு சைதில்யம் போலேகாணும் கண்ணுக்குக் கண்ணநீர், காணப் புகக்கொண்டு கண்ணநீர் பகை கொண்டாடாநின்றது. ஆநந்தாச்ருவோடு சோகாருவோடு வாசியில்லையிறே: விலக்குமதெல்லாம் பாதகமாகக் கடவது; "த்ரஷ்டவ்ய:" என்னும் விஷயத்தை நான் அநுபவிக்கப் பெற்றிலேன்.

விளக்கம் - (நெடுங்கண்கள் பனிமல்கவே) - இந்தக் கண்கள் முழுவதும், அத்தகைய முழுமை நிறையும்படி நீர் நிரம்புகிறதே! (நின்று நின்று நையும்) - தனது நிலைமையில் மாறாமல் தளிர்ந்தபடி நின்றாள். பெரும் வெள்ளத்தில் இளகிய கரையின் நிலையில் உள்ளாள். (நெடுங்கண்கள் பனிமல்கவே) - நெஞ்சத்திற்கு உருகுதல் என்பது போன்று கண்களுக்கும் கண்ணீர் உள்ளது. அவனைக் காண முயன்றாலும், இயலாதபடி கண்ணீர் பகையாக நின்று மறைத்தபடி உள்ளது. ஆனால் ஆனந்தக்கண்ணீர் என்பது நல்ல விஷயம் அல்லவோ? இதனை ஏன் பகையாகக் கூறவேண்டும்? அவனை மறைப்பதற்கு ஆனந்தக்கண்ணீர் மற்றும் சோகக்கண்ணீர் என்னும் வேறுபாடு இல்லை. விலக்கியபடி உள்ள அனைத்தும் பாதிப்பை ஏற்படுத்தியபடியே உள்ளன. "த்ரஷ்டஸ்ய: - காணப்பட வேண்டியவன்" என்னும் விஷயத்தை அவள் காண்பதை நான் கண்டு அனுபவிக்க இயலவில்லை.

6-7-7. மல்கு நீர்க் கண்ணொடு மையல் உற்ற மனத்தினளாய்
அல்லும் நன் பகலும் நெடுமால் என்று அழைத்து இனிப் போய்
செல்வம் மல்கி அவன் கிடந்த திருக்கோளூர்க்கே
ஒல்கி ஒல்கி நடந்து எங்ஙனே புகும்கொல் ஒசிந்தே

பொருள் - விரஹத்தால் மிகுந்த கண்ணீர் நிறைந்த கண்களோடு மயக்கம் அடைந்த நெஞ்சத்தை உடையவளாகவும்; இப்படியாக வெளி விஷயங்களைக் காணும் புலன்கள் அவனைக் காண்பித்து தராதபடி உள்ளபோது, தனது காதல் காரணமாக ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவளாக, அவனை எப்போதும் அழைத்தபடி இருப்பதற்கு ஏற்ப, "நன்மையுடன் கூடிய இரவும் பகலும் எனக்கு எல்லையற்ற மயக்கத்தை உடையவனே!" என்று அழைப்பவளாகவும்; அத்தகைய துன்பத்திற்கு மேலாக ஒடுங்கி, அசைந்து, நடந்து, தளர்ந்து, சென்று, செல்வம் நிறைந்து அவன் கண்வளரும் திருக்கோளூர் திவ்யதேசத்தை எப்படிச் சென்றடைவாளோ?

அவதாரிகை - இவள் ப்ரக்ருதி மார்த்தவத்தையும் பிரிவில் வந்த சைதில்யத்தையும் அநுஸந்தித்து, இவையெல்லாம் அவ்வளவும் செல்லப் போகவல்லளானாலிறே யென்கிறாள். நாம் இலையகலப்படுக்கிறோமத்தனையொழிய, இவள் போய் முடியப் புகாநின்றாளோ?

விளக்கம் – இந்தப் பெண்பிள்ளையின் சரீரத்தில் மென்மைத்தன்மை மற்றும் பிரிவினால் உருக்குலைந்து நிற்கும் தன்மை ஆகியவற்றை எண்ணிய திருத்தாயார், "இவை அனைத்தையும் கொண்டுள்ள இவள், அந்தத் திவ்யதேசம் முடிய செல்லவல்லவளோ?", என்கிறாள். "மிகவும் விரும்புதல்" என்பது நீங்கலாக, இவள் அங்கு சென்று முடிவதற்கு இயன்றபடி உள்ளாளோ?

வ்யாக்யானம் - (மல்கு நீர்க்கண்ணொடு மையலுற்ற மனத்தனளாய்) "என்றேனும் கட்கண்ணாற் காணாத அவ்வுருவை நெஞ்சென்னும் உட்கண்ணேற் காணும்" என்னும் இரண்டுமொழிய இவளெங்கனே போனபடி? கண் – மல்குநீர்க் கண்ணாயிற்று, மனம் - மையலுற்ற மனமாயிற்று. அகவாயும் இருண்டு புறவாயும் இருண்டிருக்க, இவள் எங்ஙனே போனபடி? கண்ணநீராலே கண் தோற்றாது; ப்ரேமாந்தையாகையாலே நெஞ்சு இருண்டு தோற்றாது. (மல்கு நீர்க்கண்ணொடு மையலுற்ற மனத்தனளாய்) இரண்டுக்கும் இரண்டும் நிரூபகமாயிருக்கிறபடி.

விளக்கம் – பெரியதிருவந்தாதி (23) - என்றேனும் கட்கண்ணாற் காணாத அவ்வுருவை நெஞ்சென்னும் உட்கண்ணேற் காணும் – என்பதற்கு ஏற்ப புறக்கண்கள் மற்றும் அகக்கண் ஆகிய இரண்டையும் அவனை குறித்தே வைத்துள்ள இவள், இந்த இரண்டும் இன்றி எப்படிச் செல்வாள்? கண் என்பது "மல்கு நீர் கண்" என்றும், மனமானது "மையல் உள்ள மனம்" என்றும் ஆயின. இப்படி வெளிப்பார்வை மற்றும் உள்பார்வை ஆகிய இரண்டுமே இருண்டபடி உள்ளபோது, இவள் எப்படிச் செல்வாள்? கண்ணீர் நிறைந்துள்ளதால், பார்வை தென்படாது; அன்பு காரணமாக மூடப்பட்டதால், நெஞ்சம் இருண்டு, எதனையும் பார்க்காது. (மல்கு நீர்க்கண்ணொடு மையலுற்ற மனத்தனளாய்) – இரண்டிற்கும், இவை இரண்டும் நிரூபணமாக உள்ளது.

வ்யாக்யானம் - (மையலுற்ற மனத்தனளாய் நெடுமால் என்றழைத்து) நெஞ்சொழியவே தான் கூப்பிட்டது. (அல்லும் நன்பகலும்) பகவத் விஷயத்திலே அவகாஹித்துக் கூப்பிடுகிற காலமாகையாலே, நல்லிரவும் நன்பகலும் என்கிறாள். நாட்டார் க்ஷுத்ர விஷயங்களை ஆசைப்பட்டுக் கூப்பிடாநிற்க, "எல்லாங் கண்ணன்" என்று கூப்பிடுகிற நாளிறே.

விளக்கம் – (மையலுற்ற மனத்தனளாய் நெடுமால் என்று அழைத்து) - ஆனால் நெஞ்சம் மயக்கத்தை அடைந்துள்ளபோது அவனை அழைக்கக்கூடுமோ

என்பதற்கு விடை அளிக்கிறார்; நெஞ்சம் ஏதும் செய்யாமல் இருப்பதால், தான் அழைத்தபடி உள்ளாள். (அல்லும் நன்பகலும்) - இவ்விதம் பிரிவாற்றாமை காரணமாகக் கலங்கி நின்று அழைக்கும் இவளுக்கு, பகல் மற்றும் இரவால் என்ன நன்மை உள்ளது என்பதற்கு விடை அருளிச்செய்கிறார். பகவத் விஷயத்தில் ஈடுபட்டு நின்று அழைப்பதால் “நல் இரவும், நல் பகலும்” என்கிறாள். ஆனால் இவ்விதம் நல்ல நாளோ என்றால், நாட்டில் உள்ளவர்கள் தாழ்ந்து விஷயங்களின் மீது ஆசை கொண்டு அழைத்தபடி உள்ளபோது, இவள் “எல்லாம் கண்ணன்” என்று அழைக்கும் நாள் அல்லவோ?

வ்யாக்யானம் - (நெடுமால் என்றழைத்து) அவன் தன்பக்கல் பிச்சேறியிருக்கும்படியைச் சொல்லிக் கூப்பிட்டு. (இனிப் போய்) அவன் தன்பக்கல் பண்ணும் வ்யாமோஹத்தைச் சொல்லிக் கூப்பிடுமிதுக்குமேலே தன் வ்யாமோஹங் காட்டப் போனாளே. கண்ணுந் தோற்றாதே நெஞ்சும் பறியுண்டிருக்கும் இதுக்கு மேலே, இனிப்போய், வேறே யொன்றுண்டோ அனுபவிப்பது?

விளக்கம் – (நெடுமால் என்றழைத்து) - அவன் தன்னிடம் மயக்கம் அடைந்து நிற்கும் விதத்தைக் கூறி அழைத்து. (இனிப்போய்) - அவன் தன்னிடம் மயக்கம் கொண்ட நிலையைக் கூறி அழைத்து, அதன் பின்னர் தான் அவன் விஷயத்தில் மயக்கம் கொண்ட நிலையைக் காண்பிக்கச் சென்றாளோ? அல்லது “இனிப்போய்” என்பதற்கு வேறு ஒரு கருத்தும் அருளிச்செய்கிறார்; அதாவது, கண்கள் நீர் மல்கி பார்வை சரிவரப் புலப்படாமலும், நெஞ்சும் உருக்குலைந்து சிந்திக்க இயலாமலும் உள்ள இந்த நிலையில், அங்கு சென்று, எதனை அனுபவிக்க இயலும் என்று கூறுவதாகவும் கொள்ளலாம்.

வ்யாக்யானம் - (செல்வம் மல்கி அவன் கிடந்த திருக்கோளூர்க்கே) எதிரே பாதி வழி வந்து முகத்திலே விழித்து உடம்பிலே அணைத்துக் கொண்டு போகாதே யொழிந்தது ஐச்வர்யச் செருக்கிறே! ஐச்வர்யத்தால் வந்த செருக்கு அன்றாகில் இவ்வரவு அவனன்றோ வருவான்? வழியே பிடித்து வாழ்ந்து கொண்டு போகலாயிருக்க, செருக்காலே இழந்தா னென்கிறாள். (செல்வம் மல்கியவன் கிடந்த) “ஸமயா போதித: ஸ்ரீமாந்” என்கிறபடியே, அழகு மிக்குக் கிடந்த என்னவுமாம். (அவன் கிடந்த) “ஸுக ஸுப்த:” என்ற கிடையழகு காணவாயிற்று இவள் ஆசைப்பட்டுப் போயிற்று; “கிடந்ததோர் கிடக்கை” என்னக் கடவதிறே.

விளக்கம் - (செல்வம் மல்கி அவன் கிடந்த திருக்கோளூர்க்கே) – “அவன் செல்வம் மல்கிக் கிடந்த” என்பதை வெறுப்புடன் கூறுவதாகக் கொண்டு அருளிச்செய்கிறார்; இவள் அவனைத் தேடிச் செல்லும்போது, எதிரில் பாதி வழி வந்து, இவளைக் கண்டு, இவளைத் தனது திருமேனியில் அணைத்துக் கொண்டு செல்லாமல், அங்கேயே இருந்த தன்மையானது அவனுடைய செல்வச் செருக்கையே உணர்த்துவதாக உள்ளது! இவ்விதமாக “செருக்கு” என்று ஏன் கூறினார் என்றால், செல்வம் காரணாகச் செருக்கு ஏற்படவில்லை என்றால், இவளுக்குப் பதிலாக அவன் அல்லவோ வந்திருப்பான்? இவள் வரும்போது இவளைப் பாதி வழியிலேயே கைகளைப் பிடித்து அழைத்துச் சென்று, இவளை வாழும்படிச் செய்யாமல், செருக்கால் இருந்தான் என்கிறாள். (செல்வம் மல்கியவன் கிடந்த) - அடுத்து “செல்வம்” என்பதற்கு “அழகு” என்பதாகப் பொருள் கொண்டு அருளிச்செய்கிறார்; ஸுந்தரகாண்டம் (38-24) – ஸமயா போதித: ஸ்ரீமாந் - ஸீதை அனுமனிடம், “ஸுகமாக உறங்கிய அந்த ஸ்ரீமாந் என்னால் எழுப்பப்பட்டார்” - என்பதற்கு ஏற்ப, அழகு நிறைந்த உறங்கும் அழகு அல்லவோ? (அவன் கிடந்த) – மேலே உள்ள ச்லோகத்தில் காணப்படும் “ஸுக ஸுப்த: - சுகமாக உறங்கினான்” என்பதாக உள்ள உறங்கும் அழகைக் காண்பதற்கு அல்லவோ இந்தப் பெண்பிள்ளை ஆசை கொண்டு அங்கு சென்றாள்! இவ்விதம் அவன் உறங்கும் அழகானது மனதை இழுப்பதாக இருக்குமோ என்பதற்கு ப்ரமாணம் திருமாலை (23) – கிடந்தது ஓர் கிடக்கை - என்பதாகும்.

வ்யாக்யானம் - (அவன் கிடந்த) அவன் வரவு பார்த்து இவள் இருக்கையன்றிக்கே, இவள் வரவு பார்த்து அவன் கிடக்கும்படியாவதே! (ஒல்கியொல்கி நடந்து) ஓரடியிலே பத்தடியிட வேண்டும்படியாயிருக்கை. (ஒசிந்து) துவண்டு. (ஒல்கியொல்கி நடந்து ஒசிந்து எங்ஙனே புகுங்கொல்) ஒடுங்கியொடுங்கி நடந்து, அது பொறாமல் துவண்டு, எங்ஙனே புகக் கடவளோ? (நடந்தெங்ஙனே புகுங்கொல்) நடந்திலளாகில், போய்ப்புகலாம் என்றிருக்கிறாள் காணும். “அன்னமென்னடைப் பூங்குழலி”யாகையாலே இவ்வன்ன நடை கொண்டு புகமாட்டாள் என்றிருக்கிறாள்.

விளக்கம் – (அவன் கிடந்த) – அவன் வருகையை எதிர்நோக்கி இவள் இருந்த நிலை மாறி, இவள் வருகையை எதிர்பார்த்து அவன் கிடக்கும்படி நிலைமை

ஆனது! (ஒல்கி ஒல்கி நடந்து) - ஒடுங்கி ஒடுங்கி நடந்தாள். ஓர் அடி நடப்பதற்கு, பத்து முறை இளைப்பாறி நிற்கவேண்டும்படியாகத் தளர்ந்தாள். (எழுந்து) – துவண்டு. (ஒல்கி ஒல்கி நடந்து ஒசிந்து எங்ஙனே புகுங்கொல்) - ஒடுங்கி ஒடுங்கி நடந்து சென்று, அதனைப் பொறுக்க இயலாமல் துவண்டு, அங்கு எப்படிச் சென்று சேருவாளோ? (நடந்தெங்ஙனே புகுங்கொல்) - நடக்க இயலவில்லை என்றாலும், சென்று சேர்ந்துவிடலாம் என்று உள்ளாள் போலும். நடக்காதபோது எப்படிச் செல்ல இயலாதோ அதே போன்று, நடந்தாலும் சென்று சேர இயலாது என்று கருத்து. நடந்தால் அங்கு சென்று சேரமாட்டாளோ என்பதற்கு ப்ரமாணம் பெரியதிருமொழி (11-2-5) - அன்னமென்னடைப் பூங்குழலி – என்பதாக இவள் உள்ளதால், இத்தகைய அன்னநடை கொண்டு அங்கு சென்று சேரமாட்டாள் என்று கருத்து.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி பெரியாழ்வார் அருளிச் செய்த

பெரியாழ்வார் திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை அருளிச் செய்த
ஸ்வாபதேச வ்யாக்யானம் (மூலம் மட்டும்) மற்றும்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச் செய்த
வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)
(பகுதி – 2)

1-1-2. ஓடுவார் விழுவார் உகந்து ஆலிப்பார்
நாடுவார் நம்பிரான் எங்குத்தான் என்பார்
பாடுவார்களும் பல்பறை கொட்ட நின்று
ஆடுவார்களும் ஆயிற்று ஆய்ப்பாடியே

பொருள் – க்ருஷ்ணன் பிறந்த மிகுந்த ப்ரீதியினால் திருஆயர்ப்பாடியில் உள்ள ஒவ்வொருவரும், ஒரு ப்ரயோஜனமும் கருதாது நல்லதொரு பித்துப் பிடித்து ஓடினர்; ஓடி அந்தச் சேற்றில் வழுக்கி விழுந்தனர்; ஒருவரை ஒருவர் உகந்து கட்டிக் கொண்டனர்; "பிள்ளை எங்கே? பிள்ளை எங்கே?" என்று எங்கும் தேடி, "எங்களுக்கென்றே பிறந்த தலைவன் எங்கே" என்றும் நாடி, கண்டு கொண்டே இருப்பர். ப்ரீதியினால் பாடியும் பறைகொட்டியும் கூத்தாடியும் ஓடி விழுந்து உவந்தும் கட்டிப் பிடிப்பர். இப்படியே ஆனது அந்த ஆயர்ப்பாடி.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேசம்

அவதாரிகை - அவதாரிகை - இவ்வளவிலேயன்றி தம் திருவுளத்துக்குப் பொருந்த திருவாய்ப்பாடியிலுள்ளார் ப்ரியம் கண்டபடியாலே ச்லாகிக்கிறார்.

ஸ்வாபதேசம் - (ஓடுவாரித்யாதி) ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஒரு ப்ரயோஜம் கருதாமல் ஸஸம்ப்ரமமாக ஓடுவார், ஓடச்செய்தே அளற்றிலே வழுக்கி விழுவார், ப்ரியப்பட்டு கர்விப்பார். (நாடுவார்) "பிள்ளை எங்கே" என்று தேடுவார். (நம்பிரானெங்குற்றா னென்பார்) "ராஜபுத்ரனாகையாலே எங்களுக்கு ஸ்வாமியானவன் எங்கே" என்பார், கண்டிருக்கச் செய்தேயும். (பாடுவார்களும்) ப்ரீதிக்குப் போக்குவிட்டுப் பாடுவார்களும். (பல்பறை கொட்ட நின்றாடுவார்களும்) நாநாவிதமான வாத்யங்களைக் கொட்டுவார்களும், கொட்டுக்குப் பொருந்தி நின்று ஆடுவார்களும்; அன்றியே, சிலர் தங்களுக்குத் தோற்றினபடி கொட்ட, சிலர் அநந்வயமாகக் கூத்தாடவென்னுதல். (ஆயிற்றாய்ப்பாடியே) இப்படி திருவாய்ப்பாடியில் பஞ்சலக்ஷக் குடியிலுள்ளாரில் ஒருத்தரும் விக்ருதராகாமலிருந்தாரில்லை யென்றபடி.

பெரியஜீயர் அருளிச்செய்த வ்யாக்யானம்

வ்யாக்யானம் - (ஓடுவார்) பிள்ளை பிறந்த ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே ஸம்ப்ரமித்து ஓடுவார். (விழுவார்) ஓடச்செய்தே அளற்றிலே வழுக்கி விழுவார். (உகந்து ஆலிப்பார்) ப்ரீதராய், அந்த ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே ஆர்த்துக் கொள்ளுவார். (நாடுவார்) "பிள்ளை எங்கே? பிள்ளை எங்கே?" என்று தேடுவார். (நம்பிரானெங்குற்றானென்பார்) கண்டிருக்கச் செய்தேயும் ப்ரீதிப்ரகர்ஷத்தாலே, தங்களுக்கு நிர்வாஹகரான ஸ்ரீநந்தகோபர் மகனான முதன்மை தோற்ற "நமக்கு ஸ்வாமியானவன் எங்கே?" என்பார். (பாடுவார்களும்) ப்ரீதிக்குப் போக்கு விட்டுப் பாடுவார்களும். (பல்பறை கொட்ட நின்று ஆடுவார்களும்) பல வாத்யங்களும் கொட்ட, அதுக்குப் பொருந்தி நின்று ஆடுவார்களும். அங்ஙனன்றிக்கே, சிலர் தங்களுக்குத் தோன்றினபடியே கொட்ட, நிரந்வயமாகக் கூத்தாடுவார்களும் என்னுதல். "பாடுவார்களும்" இத்யாதிக்கு ஒக்க கீழ்ச்சொன்னவை யெல்லாவற்றையும், ஓடுவாரும் விழுவாரும் என்று இங்ஙனே ஸமுச்சயித்துக் கொள்வது. (ஆயிற்றாய்ப்பாடியே) இப்படி திருவாய்ப்பாடியில் பஞ்சலக்ஷம் குடியிலுள்ளாரில் ஒருத்தரும் விக்ருதராகாமலிருந்தாரில்லை யென்றபடி.

விளக்கம் – (ஓடுவார்) – பிள்ளை பிறந்ததை அறிந்து மிகுந்த ப்ரீதியாலே நல்லதொரு பித்துப் பிடித்து எந்த ஒரு ப்ரயோஜநமும் கருதாமல் ஓடுவர். (விழுவார்) - ஓடும்போது அந்தச் சேற்றிலே வழுக்கி விழுவர். (உகந்து ஆலிப்பார்) - மிகுதியான ப்ரீதியினால், கர்வம் அடைந்து, ஒருவரை ஒருவர் கட்டி அணைப்பர். (நாடுவார்) – "பிள்ளை எங்கே? பிள்ளை எங்கே?" என்று தேடுவர். (நம்பிரான் எங்குற்றான் என்பார்) – தங்கள் முன்பாக அந்தக் குழந்தையைப் பார்த்தபடி உள்ளபோதிலும், ப்ரீதியின் மிகுதி காரணமாக, தங்களுடைய தலைவராகிய ஸ்ரீநந்தகோபருடைய மகன் ஆகையாலே, ராஜபுத்திரனான க்ருஷ்ணனை, "எங்களுக்கு நல்லதையே அளிக்கும் எங்கள் தலைவன் எங்கே" என்பர். (பாடுவார்களும்) - ப்ரீதிக்கு வழிவிட்டுப் பாடுவார்களும். (பல் பறை கொட்ட நின்று ஆடுவார்கள்) - பலவிதமான வாத்தியங்கள் முழங்க, அதற்குப் பொருந்தி நின்று ஆடுவார்களும், அது மட்டுமல்லாது, சிலர் தங்களுக்குத் தோன்றியபடி வாத்தியங்களை முழங்க விட்டுத் தங்களுக்குத் தோன்றியபடி அம்முழக்கத்தோடு பொருந்தாமல் கூத்தாடுவார்களுமாய். "ஓடுவாரும் விழுவாரும்" என்பதற்கு, இதுவரை "பாடுவார்களும்" என்பதற்குக் கூறியது போன்று கொள்ளவேண்டும். (ஆயிற்று ஆய்ப்பாடியே) – இவ்வாறு திருஆயர்ப்பாடியில் உள்ள ஐந்து லட்சம் குடியில் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் மாறுபாடு அடையாமல் இருந்தனர் என்பதே இல்லை.

1-1-3. பேணிச் சீர் உடைப் பிள்ளை பிறந்தினில்
காணத் தாம் புகுவார் புக்குப் போதுவார்
ஆண் ஒப்பார் இவன் நேர் இல்லை காண் திரு
வோணத்தான் உலகு ஆளும் என்பார்களே

பொருள் - தேவகியும் வஸுதேவரும், "கம்சனால் உனக்கு என்ன நேருமோ" என்று அஞ்சி, "உனது திவ்யமான வடிவத்தை மறைப்பாய்" என்றதும், இச்சொல்லைக் கேட்டு பிள்ளையான க்ருஷ்ணன், கம்சன் உள்ளிட்ட தன்னை உகக்காதவர்கள் காணாதபடி, தன்னைத்தானே காத்து வந்து, ஆயர்ப்பாடியில் பிறந்தபொழுதில், ஆயர்கள், பிள்ளயைக் காண ஆசைப்பட்டு உள்ளே நுழைவாரும், கண்டு புறப்படுவாரும், "ஆண்மையில் இவனுக்கு நிகர் இல்லை" என்று சொல்லுவாரும், "ஸர்வேச்வரனுடைய உலகங்களை ஆள்வான்" என்று சொல்லுவாரும் ஆனார்கள்.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேசம்

ஸ்வாபதேசம் - (பேணியித்யாதி) சீருடைய பிள்ளை பேணிப்பிறந்தினில் - சீருடைய பிள்ளையென்று சிறைக்கூடத்தில் திருவவதரித்தபோதை திவ்ய சேஷ்டிதத்தைக் கண்டு கம்ஸ பயத்தாலே பயப்பட்ட மாதாபிதாக்கள் "உபஸம்ஹர" என்றபோதே உகவாதார் காணாதபடி மறைக்கையாலும், ராமாவதாரம்போலே வளர்ந்த பின்பு பித்ரு வசந பரிபாலநம் பண்ணுகையன்றி அப்போதே பேணிப் போருகையாலும். (பிறந்தினில்) வழியிலுள்ள வ்யஸந பாஹுள்யத்தை அறிந்தவராகையாலே, கம்ஸனுக்குப் பிழைத்து திருவாய்ப்பாடி புகுந்த பின்பு திருவவதாரமாக ப்ரதிபத்தி பண்ணி "பிறந்தினில்" என்கிறார். (தாம் காணப்புகுவார்) அக்காலத்திலே பிள்ளை பெற்றவர் தாங்களும் ஹர்ஷாதிசயத்தாலே தம்தாம் புத்ர முகம் காணுங்காட்டில் பிள்ளையைக் காணப்புகுவார். (புக்குப் போதுவார்) சோபநம் சொல்லவேணுமென்கிற த்வரையாலே புகுந்து சொல்லியும் சொல்லாதும் போதுவார். (போதுவார்) "பும்ஸாம்" இத்யாதி. இதென்ன அருமைதான்? (ஆணொப்பாரித்யாதி) ஸாமுத்ரிக லக்ஷணம் போவார் இவனைப் பார்த்து "புமான்களில் இவனுக்கு ஸத்ருசரில்லை" என்பார்களும், "திருவோணத்தானுலகு ஆளும்" என்பார்களுமாய், ப்ரீதி வ்யவஹாரம் பண்ணினார்களென்று ஹ்ருஷ்டராகிறார். திருவோணம் வைஷ்ணவந க்ஷத்ரமாகையாலே "திருவோணத்தானுலகு" என்று உபயவிபூதியையும் ஆளுமென்கிறார்களென்றபடி.

பெரியஜீயர் அருளிச்செய்த வ்யாக்யானம்

வ்யாக்யானம் - (பேணிச் சீருடைப் பிள்ளை பிறந்தினில்) சீருடைய பிள்ளை பேணிப் பிறந்தினில், அவதரித்தபோதே மாதாபிதாக்கள் சொல்லிற்றுச் செய்கையாலே சீருடைய பிள்ளை என்கிறது. சீர் - குணம். அதாவது, சிறைக்கூடத்தில் திருவவதரித்தபோதை திவ்ய வேஷத்தைக் கண்டு கம்ஸன் நிமித்தமாக பயப்பட்ட மாதாபிதாக்கள் "உபஸம்ஹர" என்று அபேக்ஷிக்க, அப்போதே அந்த திவ்யவேஷத்தை மறைத்தானிறே. இப்படி உகவாதார் கண்படாதபடி தன்னைப் பேணிக்கொடுவந்து திருவாய்ப்பாடியிலே பிறந்தவளவில். கம்ஸனுக்குப் பிழைத்துத் திருவாய்ப்பாடியில் புகுந்த பின்பு காணும் இவர் பிறந்தானாக நினைத்திருக்கிறது. (காணத்தாம் புகுவார்)

பிள்ளையைக் காண ஆசைப்பட்டுத் தாங்கள் புகுவார். (புக்குப் போதுவார்) புக்குக் கண்டு புறப்படுவார். (ஆணொப்பாரித்யாதி) ஸாமுத்ரிக லக்ஷணம் போவார் இவனைப் பார்த்து, "பும்ஸ்த்வ ஸாம்யமுடையவர்களில் இவனுக்கு ஸத்ருசரில்லைகாண்" என்பாரும், "இவனுடைய லக்ஷணமிருந்தபடியால் திருவோணத்தானான ஸர்வேச்வரனுடைய லோகமெல்லாம் இவன் ஆளும்" என்பாருமாய், இப்படி ப்ரீதி வ்யவஹாரம் பண்ணினார்களென்கை. அன்றிக்கே, "ஆணொப்பான் இவன் நேரில்லை" என்று பாடமானபோது, ஆணொப்பு என்றது ஆண் படி; அதாவது பும்ஸ்த்வ லக்ஷணம்; ஒப்பான் என்றது ஒப்பால் என்றபடியாய், பும்ஸ்த்வ லக்ஷணத்தால் இவனுக்கு எதிரில்லையென்று பொருளாகக் கடவது. புகுவாரும், போதுவாரும், உலகாளும் என்பார்களுமானார்கள்.

விளக்கம் - (பேணிச் சீருடை பிள்ளை பிறந்தினில்) - பிறந்தபோதே தாயும் தந்தையும் ஆகிய தேவகி மற்றும் வஸுதேவர் சொல் பேச்சினைக் கேட்டு செய்ததால் குணமுடைய பிள்ளையானான். அதாவது, சிறைச்சாலையில் க்ருஷ்ணனாக ஸ்ரீமந்நாராயணன் பிறந்தபோது, இவனது திவ்யமான வேஷத்தைக் கண்டு, "க்ருஷ்ணா! கம்ஸனால் உனக்குத் தீங்கு நேர்ந்துவிடுமே", என்று மிகுந்த பயத்தால், "மறைத்துக்கொள்வாய்" என்று விரும்ப, அந்த நொடியில் க்ருஷ்ணன் தனது திவ்யமான வேஷத்தை மறைத்தான். இப்படியாக இவன், தன் மீது ப்ரீதி இல்லாதவர்களும், தன் மீது வெறுப்போடு உள்ளவர்கள் காணாதவண்ணம், தானே தன்னைப் பேணிக் கொண்டு வந்து திருஆயர்ப்பாடியில் பிறந்தான். இப்படியாகக் கம்ஸனிடமிருந்து தப்பிப் பிழைத்து திருஆயர்பாடியில் புகுந்த பின்பு, பெரியாழ்வார் க்ருஷ்ணனை கண்டதால், இங்கு பிறந்தான் என்று நினைத்திருந்தார். (காணத்தாம் புகுவர்) - அந்த நேரத்திலே பிள்ளையைப் பெற்றவர்கள் தாங்களும், அதிசயமாக உள்ள உவப்பினால், தத்தம் பிள்ளை முகம் காண்பதைக் காட்டிலும் க்ருஷ்ணனைக் காணப்புகுவார். (ஆனொப்பார் இவன் நேரில்லை காண்) - ஸாமுத்திரிகா லக்ஷணம் குறித்த ஞானம் உள்ளவர்கள், "ஆண்மை உடையவர்களில் இவனுக்கு ஈடு இணை இல்லை" என்று ப்ரீதி கொண்டனர். அல்லது, "ஆணொப்பான் இவன் நேரில்லை" என்று படிக்கும்போது, "ஆண் ஒப்பு" என்பது "ஆணின் விதம்", அதாவது ஆண்மையின் அடையாளம். "ஒப்பான்" என்றது "ஒப்பு நோக்கினால்" என்று கொண்டு, ஆண்மையின்

அடையாளத்தால், இவனுக்கு நேரில்லை என்றும் பொருள் கொள்ளலாம். (திருவோணத்தான் உலகாளும் என்பார்கள்) – "திருவோணத்தான், ஸர்வேச்வரனுடைய உலகங்களை எல்லாம் இவன் ஆள்வானே" என்றும் சொல்வார்கள். இப்படியாக ப்ரீதியினாலே புகுவாரும், புறப்படுவாரும், குணங்களை சொல்வார்களுமாய் இருந்தார்கள்.

ஸ்வாமி பெரியாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி திருமங்கையாழ்வார் அருளிச் செய்த

பெரிய திருமொழி

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)
(பகுதி – 2)

தனியன்கள்

2. எம்பெருமானார் அருளிச் செய்தது

வாழி பரகாலன் வாழி கலிகன்றி
வாழி குறையலூர் வாழ்வேந்தன் – வாழியரோ
மாயோனை வாள் வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோன்
தூயோன் சுடர்மான வேல்.

பொருள் – “நான்” மற்றும் “எனது” என்னும் எதிரி அபிமானங்களுக்கு யமனாக இருப்பவர் வாழ்க; அறியாமையினால் விளையும் மயக்கங்களை போக்குபவர் வாழ்க; திருக்குறையலூரில் என்றும் வாழும் மன்னன் வாழ்க; வியப்பூட்டும் குணங்களையும், இயல்வினையும், லீலைகளையும், வடிவங்களையும், ஐச்வர்யங்களையும் கொண்ட ஸர்வேச்வரனிடம், தனது வாளின் வலிமையைக் காட்டி, திருமந்திரத்தைக் கொண்டவரும், திருமங்கை நாட்டிற்கு மன்னராய் நிர்வகிப்பவரும் ஆகிய தூய்மையான ஆழ்வாருடைய ஒளி பொருந்திய வேலானது வாழ்கவே!

அவதாரிகை - (வாழி பரகாலன்) எம்பெருமானுக்குத் திருமதிள்போலே அரணாயிருப்பதான ஆறு ப்ரபந்தங்கள் செய்தருளின் ஆழ்வாருடைய திருநாமங்கள் பலவற்றையும் சொல்லி அவரை வாழ்த்துகிறது இதில். “ப்ரத்யக்ஷ

குரவஸ்ஸ்துத்யா:" என்னக்கடவதிறே. ஆழ்வார்கள் அர்ச்சாவதாரமாய் எப்போதும் எல்லார்க்கும் ப்ரத்யக்ஷராயிறே யிருப்பது.

விளக்கம் - ஸர்வேச்வரனுக்கு மதிள் போல் அரணாக ஆறு ப்ரபந்தங்களை அருளிச்செய்த ஆழ்வாருடைய திருநாமங்கள் பலவற்றைச் சொல்லி அவரை வாழ்த்துகிறார் எம்பெருமானார். "ப்ரத்யக்ஷே குரவ: ஸ்துத்யா: - குருவானவர்கள் நேரிலே துதிக்கத் தக்கவர்கள்" என்பது காண்க. ஆழ்வார்கள் அர்ச்சாவதாராமாய் எப்போதும் அனைவருக்கும் கண்முன்னே புலப்பட்டிருக்கிறார்கள். இப்படி, கண்ணுக்குப் புலப்படும் ஆழ்வாரை வாழ்த்துகிறார்.

வ்யாக்யானம் - (வாழி பரகாலன்) பகவத் த்விட்டுக்களான ப்ரதிகூலர்க்குக் காலனானவர் வாழி. (வாழி கலிகன்றி) கலிதோஷ நிவாரகர் வாழி. (குறையலூர் வாழ்வேந்தன் - வாழி) திருக்குறையலூரை அவதார ஸ்த்தலமாக வுடையராய், அது வாழும்படிக்கு அத்தை நோக்குகிற ராஜாவென்னுதல்; அங்கே வாழுகிறவ ரென்னுதல். (மாயோனை வாள் வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோன், தூயோன் சுடர்மானவேல் - வாழியரோ) என்று - ஆழ்வாரையும், அவர் திருக்கையில் வேலையும் ஒருகாலே ஆசாஸித்தபடி. (மாயோனை) "அரங்கத்தரவணையிற் பள்ளிகொள்ளும்" மாயோனையிறே வாள் வலியால் மந்திரங் கொண்டது. தென்னரங்கன்றன்னை வழி பறித்த வாளனிறே. "கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்ட"வரிடத்திலேயிறே மந்திரப்பொருள் கைக்கொண்டது. மந்திரத்தைப் பற்றியிறே மந்திரங்கொண்டது.

விளக்கம் - (வாழி பரகாலன்) - ஸர்வேச்வரனை ஏற்காததும், ஸர்வேச்வரனிடம் சரண் என விழாததும், ஸர்வேச்வரனை அன்பு செய்யாது போவதும் ஆகிய எதிரித் தன்மைகளுக்கு யமனானவர் வாழ்கவே. (வாழி கலிகன்றி) - கலிமயக்கங்களைப் போக்குபவர் வாழ்கவே. (குறையலூர் வாழ்வேந்தேன் – வாழி) - திருக்குறையலூரைப் பிறப்பிடமாக உடையவராய், அந்த ஊரில் உள்ளவர்கள் நன்றாக வாழும்படிக்கு அந்த ஊரினைக் காக்கும் மன்னனாய் அங்கேயே வாழும் அவர் வாழ்கவே. (மாயோனை வாள்வலியால் மந்திரம் கொள் மங்கையர் கோன் தூயோன் சுடர்மான வேல் வாழியரோ) என்று, ஆழ்வாரையும், அவர் திருக்கையில் உள்ள வேலையும் ஒன்றாய் வாழ்த்துகிறார். (மாயோனை) - பெருமாள்திருமொழி

(1-7) - அரங்கத்து அரவு அணையில் பள்ளிகொள்ளும் மாயோன்" என்னும் மாயவனை அன்றோ தனது வாள் வலியால் அகப்படுத்தி மந்திர உபதேசம் கொண்டார். தென் அரங்கன் தன்னை வழிப்பறித்த வாளன். நாச்சியார் திருமொழி (11-6) - கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் - என்று உள்ள இப்படிப்பட்டவனிடத்திலேயே அன்றோ கலியன் மந்திரப் பொருளைக் கைக்கொண்டார். மந்திர பொருளான ஸர்வேச்வரனைப் பற்றியே மந்திரம் கொண்டார்.

வ்யாக்யானம் - (மங்கையர்கோன்) திருமங்கைமன்னனிறே. (தூயோன்) "தூய்மை" என்னும் பாஹ்யாப்யந்தர சுத்தியையுடையவர். பெரியதிரு (3-4-10) "அங்கமலத் தடவயல் சூழாலி நாடனருள் மாரியரட்டமுக்கி யடையார் சீயம் கொங்குமலர்க் குழவியர்வேள் மங்கைவேந்தன் கொற்றவேல் பரகாலன் கலியன்" என்று தாமே தந்திருநாமங்களைக் கூறினாரிறே. (சுடர்மான வேல்) தேஜோரூபமான, மானவேல் - பெரியவேல். திருமங்கைமன்ன னெடுக்கும்படியான வேல், (வாழியரோ) இத்தால் ஆழ்வாரோபாதி ஆயுதமும் ஆசாஸ்யமென்றபடி. திருப்பா (24) "நின்கையில் வேல்போற்றி" என்னக்கடவதிறே. இதுதான் பெரியதிரு (3-4-10) "கொற்றவேலா"கையாலே வெற்றிவேலாயிருக்கும்; அத்தாலே இதின் விஜயத்தை வேண்டுகிறது.

விளக்கம் - (மங்கையர்கோன்) – திருமங்கை நாட்டிற்கு மன்னன் ஆகையால் "திருமங்கை மன்னன்" என்னும் பெயர். (தூயோன்) - "தூய்மை" என்பது புறத்தூய்மை மட்டுமல்லாமல் அகத்தூய்மையும் கொண்டவர். பெரிய திருமொழி (3-4-10) - அங்கமலத் தடவயல் சூழ் அலிநாடன் அருள் மாரி அரட்டமுக்கி அடையார் சீலம் கொங்கு மலர்க்குழவியர் வேள் மங்கை வேந்தன் கொற்றவேல் பரகாலன் கலியன் - என்று தாமே தம் திருநாமங்களைக் கூறினார் அன்றோ. (சுடர்மான வேல்) - ஒளிமயமான பெரிய வேல். திருமங்கை மன்னன் எடுக்கும் படியாக இருக்கின்ற வேல். (வாழியரோ) – "வாழியரோ" என்பது, ஆழ்வாரைப் போலவே அவருடைய ஆயுதமும் வணங்கத்தக்கது என்பதாகும். திருப்பாவை (24) - நின்கையில் வேல் போற்றி - என்று ஆண்டாள் க்ருஷ்ணனின் வேலினை வாழ்த்தியது போன்று, இவருடைய அண்ணராகிய எம்பெருமானார் ஆழ்வாருடைய வேலினை வாழ்த்துகிறார். பெரிய திருமொழி (3-4-10) - கொற்ற

வேல் - என்று தன்னாலேயே சொல்லப்பட்டதால், இது வெற்றியை மட்டுமே கண்ட வேலாக இருக்கும். இதனாலேயே இதன் வெற்றியை வேண்டுகிறார்.

3. கூரத்தாழ்வான் அருளிச் செய்தது

நெஞ்சுக்கு இருள் கடி தீபம் அடங்கா நெடும்பிறவி
நஞ்சுக்கு நல் அமுதம் தமிழ் நன்னூல் துறைகள்
அஞ்சுக்கு இலக்கியம் ஆரண சாரம் பரசமயப்
பஞ்சுக்கு கனலின் பொறி பரகாலன் பனுவல்களே

பொருள் – மனதில் உண்டாகவல்ல இருளைப் போக்கவல்ல விளக்கு; இடைவிடாமல் நீண்ட காலமாகத் தொடர்ந்து வருகின்ற பிறவி என்னும் விஷத்தை முறிப்பதற்கு ஏற்ற அமிர்தம்; தமிழ் மொழியில் உள்ள சிறந்த நூல்களில் காணப்படும் எழுத்து, சொல், பொருள், யாப்பு மற்றும் அணி என்னும் ஐந்து இலக்கணங்கள் பூர்ணமாக உள்ள இலக்கியம்; வேதங்களுக்கு ஸாரம்; மற்ற மதங்கள் என்னும் பஞ்சுக் குவியலுக்கு தீப்பொறி - இப்படிப்பட்டது எது என்றால் பரகாலன் என்னும் திருமங்கையாழ்வாரின் பாடல்களே ஆகும்.

அவதாரிகை - (நெஞ்சுக்கிருள் கடிதீபம்) இதில், ஆழ்வார் திவ்யப்ரபந்த வைபவம் சொல்லுகிறது.

விளக்கம் - இந்தத் தனியனில் ஆழ்வாரின் திவ்யப்ரபந்தங்களின் மேன்மையைக் கூரத்தாழ்வான் சொல்லுகிறார்.

வ்யாக்யானம் - (நெஞ்சுக்கிருள்கடி தீபம்) என்று நெஞ்சுக்கிருளாவது மநோமாலிந்யமான அஜ்ஞாநம். “மனனகமல”மிறே. “ஞானக்கலை”யாகையாலே அத்தை நிராகரிக்கும். “ஞானச்சுடர் விளக்கா”யிருக்கும்.

விளக்கம் - (நெஞ்சுக்கு இருள் கடி தீபம்) - நெஞ்சினில் உள்ள இருள் என்பது மனத்தில் உள்ள அழுக்கான அறியாமை. திருவாய்மொழி (1-1-2) - மனன் அகம் மலம் அற - என்றார். திருவாய்மொழி (1-9-8) – ஞானக்கலை – என்பதால், இந்த

அறியாமையை அழிக்கும், இரண்டாம் திருவந்தாதி (1) - ஞானச்சுடர் விளக்கு - என்பதாக இருக்கும் இவருடைய பாசுரங்கள்.

வ்யாக்யானம் - (அடங்கா நெடும் பிறவி நஞ்சுக்கு நல்லவமுதம்) ப்ரதிக்ரியை யொன்றாலுமடங்காதே நெடுகிப் போருகிற ஜந்மமாகிற நஞ்சுக்கு, நல்லவமுதம் - அந்த விஷத்தை மாற்றுகைக்கு நிர்விஷமான அம்ருதம். ஸம்ஸார விஷத்துக்கு அம்ருதமாயிறே "திருமால் திருநாம" மிருப்பது. திருமங்கையாழ்வார் திவ்யப்ரபந்தம், ஸம்ஸார நிவர்த்தகமான திருமந்த்ரார்த்தத்தை ப்ரதிபாதிக்குமதாயிறே யிருப்பது.

விளக்கம் - (அடங்கா நெடும் பிறவி நஞ்சுக்கு நல்ல அமுதம்) - பரிகாரங்கள் எதற்கும் அடங்காது நீண்டு கொண்டே போகின்ற பிறப்பு என்னும் நஞ்சிற்கு, நல்ல அமுதம் ஆகும். அதாவது, இந்த விஷத்தை மாற்றியமைக்கும் அமுதம் இது. வேறு எவ்விதமான விஷத்தையும் கொடுக்காத அமுதம் இது. ஸம்ஸாரம் என்னும் விஷத்திற்கு அமுதமாக உள்ளது, பெரிய திருமொழி (6-10-6) - திருமால் திருநாமம் - ஆகும். ஸம்ஸாரமான விஷத்தைப் போக்கும் திருமந்திரத்தின் பொருளைத் தெளிவாகச் சொல்லும் அமுதம் இது.

வ்யாக்யானம் - (தமிழ் நன்னூல் துறைகளஞ்சுக்கிலக்கியம்) த்ராவிட சாஸ்த்ரம். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரம் என்கிற விலக்ஷணமான பஞ்சலக்ஷணத்தோடே கூடியிறே யிருப்பது. அன்றிக்கே, தமிழுக்கு எழுத்து முதலான அஞ்சு லக்ஷணத்தையும் அறுதியிடுவதான நன்னூலென்று ஒரு சாஸ்த்ரமுண்டு, அத்தைச் சொல்லிற்றாதல்; ஏவம்விதமான த்ராவிட சாஸ்த்ர மார்க்க பஞ்சகத்துக்கு, (இலக்கியம்) "இலக்கணவிலக்கியம்" என்றிறே அவர்கள் சொல்லுவது; அதுக்கு லக்ஷ்யமாய்ப் படிமாவாயிருக்கும். இத்தைப் பார்த்து லக்ஷணம் கட்டலாயிருக்கை.

விளக்கம் - (தமிழ் நன்னூல் துறைகள் அஞ்சுக்கு இலக்கியம்) - இலக்கணம், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரம் என்கிற சிறப்பு மிக்க ஐந்து லக்ஷணத்தோடு கூடியிருக்கும் நல்ல நூல். இல்லையெனில், தமிழுக்கு எழுத்து முதலான ஐந்து லக்ஷணத்தையும் விதிப்பதான நன்னூல் என்னும் ஒரு சாஸ்த்ரம்

உள்ளது; அதனைக் கூறியதாகவும் கொள்ளலாம்; இவ்வாறு கொண்டால், "இலக்கண இலக்கியம்" என்று சொல்லுவது போல், இவருடைய இலக்கியத்திலிருந்தே இந்த ஐந்து லக்ஷணத்திற்கும் இலக்கணம் அமைக்கலாம் என்னும்படியாக உள்ளது.

வ்யாக்யானம் - கேவலம் தமிழுக்கு லக்ஷ்யமாயிருக்கை யன்றிக்கே, ஆரண சாரமுமாயிருக்கும்; வேதஸாரமுமா யிருக்குமென்றபடி. திருமந்த்ரார்த்தமிறே இதில் ப்ரதிபாதிப்பது. "நாராயணாவென்னும் நாமம்'" என்று உபக்ரமித்து, "பேசுமின் திருநாம மெட்டெழுத்தும்'" என்றும், "'நின் திரு வெட்டெழுத்துங் கற்று நானுற்றது முன்னடியார்க் கடிமை" என்றும், "இமையோர் தலைவருடைய திருநாமம் நங்கள் வினைகள் தவிர வுரைமின் நமோநாராயணம்'" என்றும், "நரநாரணனா யுலகத்தற நூல் சிங்காமை விரித்தவன்" என்றும், "நாட்டினாய் என்னை காட்டினாய்" என்றும், "மந்திரத்தை மந்திரத்தால் வறவாது" என்றும், "பேராளன் பேரோதும்" என்றும், "நாராயணாவோ மணிவண்ணா" என்றும் திருமந்தரார்த்த விசாரமேயிறே முடிய நடந்து போருகிறது. ஆகையால், "ஆரண சாரம்" என்கிறது. ஸகல வேத ஸங்க்ரஹதயா தத் ஸாரமாயிறே திருமந்த்ரந்தா னிருப்பது.

விளக்கம் – தமிழுக்கு மட்டுமே இலக்கணமாக இருப்பது என்று அல்லாமல், வேதத்தின் சாரமுமாக இருக்கிறது. ஏனெனில், வேதத்தின் சாரமான திருமந்திரத்தின் ஆழ்பொருள் அன்றோ இதில் சொல்லப்பட்டிருக்கிறது! பெரிய திருமொழி (1-1-1) - நாராயணா என்னும் நாமம் -என்று தொடங்கி, பெரிய திருமொழி (1-8-9) - பேசுமின் திருநாமம் எட்டெழுத்தும் -என்றும், பெரிய திருமொழி (8-10-3) - நின் திரு எட்டெழுத்தும் கற்று நான் உற்றதும் உன்னடியார்க்கு அடிமை - என்றும், பெரிய திருமொழி (6-10-9) - இமையோர் தலைவருடைய திருநாமம் நங்கள் வினைகள் தவிர உரைமின் நமோ நாராயணமே -என்றும், பெரிய திருமொழி (10-6-1) - நர நாரணனாய் உலகத்தற நூல் சிங்காமை விரித்தவன் (10-6-1) - என்றும், பெரிய திருமொழி (8-10-9) - நாட்டினாய் என்னை காட்டினாய் - என்றும், திருநெடுந்தாண்டகம் (4) - மந்திரத்தை மந்திரத்தால் மறவாது -என்றும், பெரிய திருமொழி (7-4-4) - பேராளன் பேரோதும் - என்றும், சிறிய திருமடல் (50) - நாராயணா ஓ மணிவண்ணா - என்றும், திருமந்திரம் உணர்த்தக்கூடிய மெய்யினை விசாரித்து விவரித்து முடித்தது அன்றோ?

ஆகையால், "ஆரண சாரம்", அதாவது வேதங்களின் சாரம் என்று கூறப்பட்டது. அனைத்து வேதங்களின் பொருளையும் தன்னுள்ளே அடக்கியதாக இருப்பது திருமந்திரம்; திருமந்திரத்தை இவருடைய ப்ரபந்தம் அடக்கியிருப்பதால், இவருடைய ப்ரபந்தங்கள் வேதங்களின் சாரம் ஆகிறது.

வ்யாக்யானம் - (பர சமயப் பஞ்சுக் கனலின் பொறி) பர ஸமயமாகிற தூலராகிக்குக் காலாநல கணமாயிருக்கை. "வெள்ளியார் பிண்டியார் போதியாரென்றிவ ரோதுகின்ற கள்ள நூல்களை", "செம்மைப் பனுவல் நூலாலே"யிறே இவர் கழித்துத் தள்ளுவது. "பர சமயக் குறும்பறுத்த"வரிறே.

விளக்கம் - (பர சமயப் பஞ்சுக் கனலின் பொறி) – திருக்கல்யாணகுணங்களுடனும் திருமகளுடனும் கூடிய பரம்பொருளை வழியாகக் கொள்ளாத புறச்சமயமாகிற பஞ்சுக் குவியலை அழிக்கும் ஊழி காலத்தீ போல் இருப்பது இவரது ப்ரபந்தங்கள். பெரிய திருமொழி (9-7-9) - வெள்ளியார் பிண்டியார் போதியார் என்று இவர் ஓதுகின்ற கள்ள நூல் - என்னும் நூல்களை, பெரிய திருமொழி (10-10-10) - செம்மைப் பனுவல் நூல் –என்பதற்கு ஏற்ப உள்ள தன்னுடைய நூல்களினாலே கழித்துத் தள்ளி, அவர்களது குறும்புகளை அறுக்கவல்லவரே இவர்.

வ்யாக்யானம் - இதெல்லாமாவதெதுதானென்ன; (பரகாலன் பனுவல்களே) "மருவலர்த முடல் துணிய வாள் வீசும் பரகாலன் பனுவல்களே" இவற்றைச் செய்து முடிக்கும். அவரும் வேண்டா, அவர் ஸ்ரீஸூக்திகளே யமையும் இந்தக் கார்யங்களைச் செய்கைக்கென்கை. இவரதிகரித்த கார்யத்துக்குக் கையும் வாயுமொத்திருக்கிறபடி யிதுவாயிற்று.

விளக்கம் - இத்தகைய காரியத்தை எது செய்து முடிக்கும் என்றால், (பரகாலன் பனுவல்களே) - பெரிய திருமொழி (3-9-10) - மருவலர்த் தம் உடல் துணிய வாள்வீசும் பரகாலன் - இப்படி பகவத் பாகவத விரோதிகளின் உடல்கள் கூறாகும்படி வாள் வீசும் பரகாலனுடைய பனுவல்களே, இவற்றைச் செய்து முடிக்கும். அதாவது, அவர் இருக்க வேண்டும் என்று தேவையில்லை. அவரது திருவாயாலே சொன்ன திவ்யப்ரபந்தங்களே இதனைச் செய்து முடிக்கும். இப்படி,

விரோதி பாவனைகளை அழிக்கும் காரியத்திற்கு, இவருடைய கையும் வாயும் ஒரே போன்று அமைந்திருக்கிறது என்றதாகும்.

ஸ்வாமி திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்